# 03

# அழகிய தேன்சிட்டு

எனது சிறகுகள் கருநீல நிறத்திலானவை. எனது கழுத்தும் கருநீல நிறத்தோடு மின்னிக்கொண்டு இருக்கிறது. என்னிடம் நீண்ட சொண்டு ஒன்றிருக்கிறது. அதனை கொண்டே நான் மலர்களின் தேனை அருந்துகிறேன். நான் அழகியதொரு தேன்சிட்டு என்பதால் எனது வாழ்க்கையும் அழகானதொன்று என்றே நீங்கள் நினைப்பீர்கள். அவ்வாறு நீங்கள் நினைப்பதாயின் அது முற்றிலும் தவறாகும்.

நான் சிறு வயதிலிருக்கும் போதே எனது பெற்றோர்கள் ஏனைய விலங்குகளுக்கு இரையாகிவிட்டனர். சிறிது காலமாக நான் தனிமையாகவே வாழ்ந்தேன். அண்மையில் தான் எனக்கு இந்த பெண் சிட்டு அறிமுகமானாள். பறவைகளின் உலகம் விசித்திரமானது. பல்வேறுபட்ட வண்ணங்களை உடைய பல்வகையான அலகுகளை உடைய வெவ்வேறு ஓசைகளை எழுப்பும் சிறியவை பெரியவை என வேறுபாடுடைய பறவைகளும் இருக்கின்றன. ஆனால் இவ்வனைத்து வகையான பறவைகளினதும் வாழ்க்கை ஒருவிடயத்தில் ஒத்து போகிறது. அதுதான் துன்பங்கள் நிறைந்த பயமிகுந்த வாழ்க்கை.

நாம் வாழ்ந்து வந்த பிரதேசம் கோடைக்கு உட்பட்டது. மரஞ்செடி கொடிகள் காய்ந்து விட்டன. மலர்செடிகள் இறந்து போயின. மிகவும் கடுமையான வெயிலாக இருந்தது. இந்த கடுமையான வெயிலில் எம்மால் பறந்து செல்ல முடியாது. எனவே நாமிருவரும் அப்பிரதேசத்தினை விட்டு இங்கே வந்துவிட்டோம். பசுமையான மரங்கள் நிறைந்த பூக்கள் பூத்து குலுங்கும் பிரதேசத்தை நோக்கி பறந்து சென்றோம். செல்லும் வழியில் வண்ணத்துப்பூச்சியாக உருமாறவிருக்கும் கூட்டுப்புழுக்களை ஆகாரமாக்கிக்கொண்டோம். சிறு சிறு வண்ணத்துப்பூச்சிகளையும் உணவாக உட்கொண்டோம். ஆனாலும் அவை தேனை போல் இனிக்குமா என்ன? அன்று நாம் பறந்து செல்லும் வழியில் ஒரு பறவையின் அழுகுரல் கேட்டது. ஓசை வந்த திசைக்கு நாம் மெதுவாக சென்று பார்த்தோம். அங்கே... அங்கே என்ன செய்தார்கள் தெரியுமா? கிளிகளின் சிறகுகளை ஒரு கொடிய மனிதன் வெட்டிக்கொண்டிருந்தான். நாம் தூரத்திலிருந்தே அவர்கள் அறியாத வண்ணம் மெதுவாக பார்த்துக்கொண்டிருந்தோம்.

‘பாவி மனுசனே... ஒரு நல்ல வேலையை தேடிக்கொள்ளேன். ஏன் இந்த மாதிரி அப்பாவி கிளிகளுடைய சிறகுகளை வெட்டி கூட்டில் அடைத்து விற்கும் பாவ வேலைகளை செய்கிறாய்’ என்று ஒரு பாட்டி சத்தமிட்டாள். ‘பாவம் என்று என்ன செய்வது? நாமும் வாழ வேண்டும் தானே. எனக்கு வேறெந்த வேலையும் தெரியாதென்று உனக்கு தெரியாதா? நாம் இவைகளை கொல்ல மாட்டோம் தானே... இன்னும் கொஞ்ச காலத்தில இவைகளுக்கு திரும்பவும் சிறகுகள் வளர்ந்துவிடுமே...’. என்று அந்த கொடிய மனிதன் பதிலளித்தான்.

அங்கிருந்த ஒரு கிளிக்குஞ்சு தன் தாயிடம் ‘ஐயோ..அம்மா...எனக்கு மிகவும் வலிக்கிறது. என்னால் பறக்கவும் முடியவில்லை. அந்த பாவி மனுசன் என்னுடைய கழுத்தை இறுக்கி பிடித்ததால் மிகவும் வலிக்கிறது..’ அதற்கு தாய் கிளி ‘மகன் இங்க பார் அந்த பாவி என்னுடைய சிறகுகளை வெட்டும் போது அந்த கத்தி என்மீது பட்டதால் இன்னும் இரத்தம் வழிகிறது. நானும் மிகுந்த வேதனையிலேயே இருக்கிறேன். யார் தான் எமது வேதனையை உணர்வார்கள்..?

அங்கு இருபதிற்கும் மேற்பட்ட கிளிகள் இருந்தன. சில கிளிகள் கூட்டினுள்ளும் வேறு சில கூண்டிற்கு வெளிபுறமாகவும் இருந்தன. அந்த கிளிகளால் பறக்க முடியாது. அப்போது இந்த பெண் சிட்டு என்னிடம் ‘எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. எமது சிறகுகளையும் இவ்வாறு வெட்டிவிடுவார்களா’ எனக்கேட்டாள். அந்த மனுசன் அந்த கிளிகளை நசுக்கி பிடிப்பதை பார்... எம்மை எவ்வாறு பிடித்து சிறகுகளை எவ்வாறு வெட்ட முடியும்? இந்த பிடிக்கு ஈடுகொடுக்க முடியாமல் நாம் இறந்தே போய்விடுவோம்.. பின்னர் சிறகுகளை வெட்டித்தான் என்ன பயன்?
‘வாருங்கள் நாம் இங்கிருந்து சீக்கிரமாக போய்விடுவோம். எனக்கு பயமாக உள்ளது.’ இந்த பெண்சிட்டு மிகவும் பயந்த சுபாவம் உள்ளவள். எனவே நாம் சீக்கிரமாகவே அங்கிருந்து புறப்பட்டோம். வேறு ஒரு பிரதேசத்திற்கு வந்தோம். அங்கு முற்புதர்கள் நிறைந்த ஒரு சிறு காட்டை அடைந்தோம். பாம்புகளின் அபாயம் இருந்தாலும் என்ன செய்வது? இந்த பறவைகளாக பிறந்தால் துன்பமின்றி இன்பமேது?
சாயுங்காலத்தில் எமது பார்வை மங்கிவிடும். தெளிவாக எதனையும் காண முடியாது. அதனால் நாமும் இருள் சூழும் போதே புதர்களுக்குள் சென்று மறைவாக இருந்து கண்களை மூடிக்கொள்வோம். ஆனால் நிம்மதியாக உறங்கியதே இல்லை. சிறிய சப்தத்தினை கேட்டாலே மிகுந்த பயம்

கொள்வோம். பொழுது விடியும் வரை நாம் உயிர் வாழ்வோமா எனும் நம்பிக்கை எம்மிடம் சிறிதளவேனும் இல்லை. சூரியோதயத்துடன் எமது கண்கள் புலப்பட ஆரம்பிக்கும். அப்போது நாம் மெதுவாக புதர்களிலிருந்து, மறைந்திருந்த இலைகுலைகளிலிருந்து வெளியே வருவோம். மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த சந்தோஷத்தின் வெளிப்பாடு தான் நாம் எழுப்புகின்ற இனிய ஓசைகள். ஆனால் அந்த சந்தோஷம் சிறிது நேரம்தான் நிலைத்திருக்கும். சிறிது நேரத்தில் தாங்க முடியாத பசியால் துன்புறுவோம். ஏதேனும் உணவை தேடிக்கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாவோம்.

எமது சகோதர பறவைகளில் பெரும்பாலானோர் அகாலத்திலேயே மரணம் அடைகின்றனர். மழையில் கொஞ்சம் நனைந்தவுடன் நாம் நோய்களுக்கு ஆளாவோம். வெயில் அதிகமானாலும் நோயாளிகளாவோம். நாம் பெரும்பாலும் உயிருக்காக போராடுவது இன்னுமொரு விலங்கிற்கு இரையாகும் போதுதான். நாம் நோயுற்றேதும் கீழே விழுந்துவிட்டால் கட்டெறும்புகள், செவ்வெறும்புகள் போன்ற எறும்புகளும் மற்றும் சிறு பூச்சிகளும் நாம் உயிருடன் ஓலமிடும் போதே கடித்து சாப்பிட்டுவிடும். மரணத்தருவாயில் நாம் மிகவும் துயரனுபவிப்போம்.

தேனிருக்கும் மலர்களை தேடுவது மிகவும் கடினம். வாழ்நாளின் பெரும்பகுதியை என்னை போன்ற பறவைகள் பசியுடனேயே காலம் நடத்த வேண்டியுள்ளது. சிற்சில வீடுகளில் மலர்செடிகள் இருக்கும். ஆனால் இன்று அனேகமான மலர்களில் தேனை அருந்தும் போது நாம் நோயுறுகிறோம். எனது இனத்தின் பெரும்பாலான பறவைகள் நச்சு மருந்து தெளிக்கப்பட்ட செடிகளின் மலர்களில் தேனருந்தி இறந்து போயின. ஒருநாள் நாம் இருவரும் ஒரு பெரிய பூந்தோட்டத்திற்கு சென்று மலர்களின் தேனை அருந்திக்கொண்டிருந்தோம். அங்கிருந்த ஒரு இளைஞன் எம் இருவரையும் சுட்டிக்காட்டி ‘அங்கே பாருங்கள், அழகான இரண்டு சோடிகள்... பாருங்கள், மிகவும் அற்புதம். அங்கே... அந்த ஜோடிகள் எவ்வளவு சந்தோஷ மாக இருக்கின்றன’ அப்போது அங்கிருந்த யுவதி ‘நானும் அடுத்த பிறவியில் ஒரு சிட்டாக பிறக்க வேண்டும்... அப்போது என்னாலும் இவர்களை போல் சுதந்திரமாக பறக்க முடியும்... அங்கே பாருங்கள் கீச் கீச் என்று எவ்வளவு சந்தோஷமாக பேசிக்கொள்கின்றன...’

மனித உலகில் எவரும் எம்மை புரிந்து கொள்வதில்லை. நாம் கீச்சிட்டது சந்தோஷத்திற்காக அல்ல. எமது துக்கத்தினையே பகிர்ந்து கொள்கிறோம்.

எமக்கு இந்த காலத்தில் மலர்களில் தேனும் இல்லை. கறையான்களும் இல்லை. புழுக்களும் மிகவும் குறைவு. நாம் மரணப்பீதியிலேயே இருக்கிறோம். எமக்கு வாழ்வதற்கு ஒரு இடமில்லை. சாப்பிடுவதற்கும் ஒன்றுமில்லை. இவ்வாறான வாழ்வையா மனிதர்கள் விரும்புகிறார்கள்.

இந்த பெண் சிட்டு முட்டையிட உள்ளது. நாம் மிகவும் சிரமப்பட்டு ஒரு கூட்டினை கட்டிக்கொண்டோம். யாராலும் எளிதாக காண முடியாத இடத்தில் தான் அதனை கட்டினோம். எனது மனைவி இரு முட்டைகளை இட்டாள். நாம் அன்று மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் அவற்றை எம்மால் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது. ஒருநாள் நாம் உணவு தேடி மீண்டும் வரும் வேளை யாரோ எமது கூட்டினை உடைத்திருந்தார்கள். முட்டையோடுகள் மட்டும் தான் எஞ்சியிருந்தது... நான் நினைக்கிறேன் ஏதேனும் ஒரு பாம்பாக இருக்கும். அன்றிலிருந்து நாம் கவலையாகவே இருக்கிறோம்.

ஒருநாள் இரவுவேளை குருவிகள் ஓலமிடும் சத்தங்கேட்டது. ‘கலவத்தான்’ என்று ஒரு மிருகம் இருக்கிறது. அந்த மிருகத்தினால் எந்தமரத்திலும் உச்சிவரை செல்ல முடியும். அது இரவு வேளைகளில் மரங்களில் ஏறி கிளைகளில் தூங்கிக்கொண்டிருக்கும் பறவைகளை கழுத்தினாலேயே கௌவிக்கொன்று சாப்பிட்டுவிடும். அதன்பிடியிலிருந்து எந்த பறவையாலும் தப்ப முடியாது. குருவி கத்திக்கொண்டிருக்கும் போதே விழுங்கிவிடும். ஆந்தையும் குருவிகள் இருப்பிடத்தை அறிந்துகொண்டால் எவ்வாறாயினும் பிடித்து சாப்பிட்டுவிடும்.

ஒருநாள் நாமிருவரும் தேன் தேடி வெகு தூரம் சென்றோம். அன்று எம்மால் பூந்தேன் தேடிக்கொள்ள முடியாமல் போய்விட்டது. மிகுந்த பசியில் இருந்த நான் ‘நீ அந்த பக்கமாக சென்று பார்... நான் இத்திசையில் சென்று தேடுகிறேன்’ என்று சொன்னேன். நான் தேன் தேடிச்சென்றாலும் எனக்கு கிடைக்கவில்லை. பசியுடனே புதருக்குள் வந்தேன். ஆனால் பெண் சிட்டு வந்திருக்கவில்லை. இரவு வெகு நேரமாகியும் வரவேயில்லை. நான் விடியும் வரை அழுது கொண்டே இருந்தேன். மறுநாள் எல்லா இடத்திலும் அவளை தேடிப்பார்த்தேன். ஆனால் கிடைக்கவில்லை. நான் மீண்டும் தனிமையாகிவிட்டேன். அந்த அப்பாவி பெண் சிட்டு எந்த மிருகத்திற்காவது உணவாகியிருப்பாள். இம்மாதிரியான துன்பம் மிகுந்த பறவை வாழ்க்கையை பெறுவதற்கு நாம் எவ்வளவு பாவம் செய்திருப்போம்...?

கவலை நிறைந்தது எமது வாழ்க்கை - உணவு உறையுள் இல்லாத வாழ்க்கை
இனிமையான ஓசை எழுப்பி அழும் வாழ்க்கை... வண்ண இறக்கைகளால் மூடிய வாழ்க்கை
ஒருநாளும் வேண்டக் கூடாதது இந்த வாழ்க்கை - வெளித்தோற்ற அழகு அகத்தே இல்லாத வாழ்க்கை
கரணம் அடித்து பறந்து போகும் வாழ்க்கை - எங்கே மடிந்து வீழ்வோம் என அறியாத வாழ்க்கை..
தவறிழைத்து பாவம் செய்தோம் மனித வாழ்க்கையில் - அதன் விளைவாலே எமக்கு கிடைத்தது இந்த பறவை வாழ்க்கை..